டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் வெல்லர்ஸ்

agridoctor.in | 12.11.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 121 | Madurai | Online Edition

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்

தக்காளி அறுவடைக்கு முந்தைய விலை முன்னறிவிப்பு



கோயம்புத்தூர், நவ.11

இந்தியாவின் மிக முக்கியமான காய்கறிப் பயிர்களில் தக்காளியும் ஒன்றாகும். இது நாட்டின் மொத்த காய்கறி உற்பத்தியில் சுமார் 9.5 சதவீத பங்களிப்பை வழங்குகிறது.

உலக அளவில் தக்காளி உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளதுடன், உலக உற்பத்தியில் சுமார் 11 சதவீத பங்களிப்பை வழங்குகிறது. இந்திய அரசின் வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன்மதிப்பீட்டின்படி (2025-2026), இந்தியாவில் சுமார் 8.34 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. இதன் உற்பத்தி சுமார் 214.61 லட்சம் டன்களாக உள்ளது. மத்தியப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, குஜராத், ஒடிசா, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகியவை தக்காளியை அதிகளவில் உற்பத்தி செய்யும் மாநிலங்களாகும்.

தமிழ்நாடு, இந்தியாவின் மொத்த தக்காளி சாகுபடி பரப்பளவில் சுமார் ஐந்து சதவீத பங்களிப்பை வழங்குகிறது. இங்கு சுமார் 0.38 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தக்காளி பயிரிடப்பட்டு, சுமார் 12.18 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தர்மபுரி, கிருஷ்ணகிரி, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் ஆகிய மாவட்டங்கள் தமிழ்நாட்டில் தக்காளி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உள்ளூர் சாகுபடி, தக்காளியின் தேவையைப் பூர்த்தி செய்வதில் கணிசமான பங்களிப்பை வழங்கினாலும், அண்டை மாநிலங்களான ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவிலிருந்து வரும் வரத்து, தமிழ்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்ய உதவுகிறது.

தற்போது, ஒட்டன்சத்திரம் சந்தையானது அருகிலுள்ள கிராமங் களிலிருந்து தக்காளியைப் பெறுவதுடன், கர்நாடகாவிலிருந்தும் தொடர்ந்து வரத்தைப் பெறுகிறது. அதே சமயம், ஒட்டன்சத்திரம் சந்தை வழியாக உபரி தக்காளி கேரளாவுக்கு அனுப்பப்படுகிறது. இது அதிகப்படியான வரத்தைச் சமநிலைப்படுத்தி, சந்தையில் தக்காளி கிடைப்பதை உறுதி செய்ய உதவுகிறது.

இந்தச் சூழலில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் வேளாண் பொருளியல் துறையின் கீழ் இயங்கும், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை நுண்ணறிவுப் பிரிவு, ஒட்டன்சத்திரம் சந்தையில் கடந்த 15 ஆண்டுகளில் நிலவிய தக்காளி விலைகளை ஆய்வு செய்துள்ளது. இந்த ஆய்வின் முடிவுகளின்படி, அறுவடை காலத்தில் தரமான தக்காளியின் பண்ணை விலை கிலோவுக்கு 30 ரூபாய் வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வணிக வட்டாரங்களின் தகவல்படி, அறுவடை காலத்தில் மழை பெய்தாலோ அல்லது பிற மாநிலங் களிலிருந்து அதிக அளவில் தக்காளி வரத்து இருந்தாலோ, அது உள்ளூர் சந்தை விலையைப் பாதிக்கக்கூடும். எனவே, விவசாயிகள் இதைக் கருத்தில் கொண்டு, தங்கள் விளை பொருட்களை விற்பனை செய்வது குறித்து தகுந்த முடிவுகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தை நுண்ணறிவுப் பிரிவு, வேளாண் பொருளியல் துறை, வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. தொலைபேசி : 0422-2431405, மின்னஞ்சல் : tndemic@gmail.com தொடர்பு கொள்ளலாம்.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்த தொழில்நுட்பங்கள் விழிப்புணர்வு பயிற்சி



கடலூர், நவ.11

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் குறித்த தொழில்நுட்பங்கள் விழிப்புணர்வு பயிற்சி 11.11.26 அன்று நடைப்பெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் வேளாண் பொறியியல் துறையும் இணைந்து நடத்தியது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, சிறப்புரையாற்றினார். இப்பயிற்சியை சிந்துஜா (உதவி செயற்பொறியாளர்), சூரிய உலர்த்தியின் பயன்கள், அதன் முக்கியத்துவம் மற்றும் மானிய விபரம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். மேலும், இப்பயிற்சியில் தினேஷ், ஆதி சோலார் நிறுவனம், ஆதி சோலார் பவர் பிளாண்ட், ஆதி சோலார் வாட்டர் ஹீட்டர், ஆதி சோலார் பம்பு, ஆதி சோலார் மின்வேலி, ஆதி சோலார் தெரு விளக்கு, சூரிய கூடார உலர்த்தி, சூரிய கூடார உலர்த்தியின் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் மானிய விபரம், விண்ணப்பிக்கும் முறை பற்றி தெளிவாக விளக்கினார். இப்பயிற்சியில் ஆக்ரிதோஸ்த் நிறுவனமும் கலந்துக் கொண்டனர். மேலும் இப்பயிற்சியில் முனைவர். சத்தியநாராயணன், முனைவர். சுஜெய்வேலு மற்றும் முனைவர்.கமலக்கண்ணன் ஆகியோர் கலந்துக் கொண்டு தொழில்நுட்பயுரையாற்றினார். இப்பயிற்சியில் விவசாயிகள் தங்களது பொறியியல் துறை சார்ந்த ஐயங்கள் தீர்க்கப்பட்டது. மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

விளைநிலம் காப்போம் இயக்கம்

Khet Bacho Abhiyan 2026



கோயம்புத்தூர், நவ.11

கோயம்புத்தூர் மாவட்ட வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் Khet Bacho Abhiyan 2026 விளைநிலம் காப்போம் இயக்கம் அக்டோபர் 22ஆம் தேதி முதல் நவம்பர் 30ஆம் தேதி வரை பல்வேறு கிராமங்களில் நடத்தப் பட்டு வருகிறது.

இம்முகாம் கோயமுத்தூர் மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் முன்னிலையில் நடைபெற்று வருகிறது. இம் முகாமின் மூலம் விவசாயிகளிடையே மண்ணின் ஆரோக்கியம், மண் வளப் பாதுகாப்பு, மண் சீரழிவைத் தடுத்தல் மற்றும் நிலை யான வேளாண்மை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு மண்ணின் முக்கியத்துவம், மண் அரிப்பைத் தடுக்கும் முறைகள், மண்ணில் கரிமப் பொருட்களின் அளவை அதிகரித்தல் மற்றும் மண் வளத்தை நீண்டகாலம் பாதுகாப்ப தற்கான வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மண் பரிசோதனையின் அவசியம், மண்ணின் தன்மைக்கேற்ப உரமிடுதல் மற்றும் சமச்சீர் உர மேலாண்மை குறித்தும் விளக்கப்பட்டது. பசுந்தாள் உரப் பயிர்கள் சாகுபடி, தொழு உரம், மண்புழு உரம், கம்போஸ்ட் மற்றும் பிற இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மண்ணின் கரிம கார்பன் அளவை அதிகரித்தல், மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் நுண்ணுயிர்களின் செயல் பாட்டை ஊக்குவித்தல் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

மேலும், பயிர் சுழற்சி முறை, பயிர்க் கழிவு மேலாண்மை, மூடாக்கு அமைத்தல், குறைந்தபட்ச உழவு மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மேலாண்மை போன்ற மண் பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் குறித்தும் செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை பரிந்துரைக்கப்பட்ட அளவில் பயன் படுத்துதல், மண்ணின் உப்புத்தன்மை மற்றும் அமிலத்தன்மை போன்ற பிரச்சினைகளை முறையாக மேலாண்மை செய்தல் ஆகியவற்றின் அவசியமும் எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் வயல்களில் காணப்படும் மண் வளப் பிரச்சினைகள் மற்றும் மண் சீரழிவு தொடர்பான காரணங்கள் குறித்து விளக்கப்பட்டது. மண் பரிசோதனை அடிப்படையில் உரமிடுதல் மற்றும் மண் வளத்தைப் பாதுகாக்கும் நிலையான வேளாண் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அசோலா தயாரிக்கும் முறை குறித்து வேளாண் மாணவிகள் விவசாயிகளுக்கு செயல்விளக்கப் பயிற்சி



பெரம்பலூர், நவ.11

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் திருச்சி நாளந்தா வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த இறுதி ஆண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர், ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் களப்பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, மாணவிகள் நாட்டார்மங்கலம் கிராம விவசாயிகளுக்கு அசோலா தயாரிக்கும் முறை மற்றும் அதன் பயன்பாடுகள் குறித்து செயல்விளக்கப் பயிற்சி அளித்தனர். அசோலா என்பது நீரில் மிதந்து வளரும் ஒரு சிறிய பெரணி வகைத் தாவரமாகும். இதில் அதிக அளவு புரதச்சத்து மற்றும் பல்வேறு ஊட்டச்சத்துகள் உள்ளன. இது கால்நடைகள், கோழிகள் மற்றும் மீன்களுக்குத் துணைத் தீவனமாகப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இச்செயல்விளக்கம் விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் அசோலா உற்பத்தி செய்வது குறித்த விழிப்புணர்வையும், கால்நடைத் தீவனச் செலவைக் குறைக்கவும், இயற்கை வளங்களைச் சிறப்பாகப் பயன் படுத்தவும் உதவியாக அமைந்தது. இறுதியாக, இப்பயிற்சி குறித்த சந்தேகங்களை விவசாயிகள் மாணவிகளிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

இப்கோ நானோ NPK - ஒரு பார்வை

சென்னை, நவ.11

இப்கோ நிறுவனம், பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து (N), மணிச்சத்து (P), சாம்பல்சத்து (K) ஆகியவற்றை உள்ளடக்கிய நானோ NPK (8:8:10%w/w) திரவ உரத்தை விவசாயிகளின் பயன்பாட்டிற்காக அறிமுகப் படுத்தியுள்ளது. இத்திரவ உரம், பயிர்களுக்குத் தேவையான ஊட்டச்சத்துகளைத் துல்லிய மாகவும் சமச்சீராகவும் வழங்கி, பயிர்களின் வளர்ச்சி மற்றும் ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறனை மேம்படுத்த உதவுகிறது.



பயன்படுத்தும் முறை

இலைவழித் தெளிப்பு முறையில் பயிர் களுக்கு ஊட்டச் சத்துகளை வழங்கும் வகையில் இத்திரவ உரம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் ஊட்டச்சத்துகளைப் பயிர்களுக்கு நேரடியாக வழங்க உதவுகிறது.

நன்மைகள்

சமச்சீர் ஊட்டச்சத்து : பயிர்களுக்குத் தேவையான ஹிஜ்ணலு ஊட்டச்சத்துகளைச் சீராக வழங்க உதவுகிறது.

ஊட்டச்சத்துப் பயன்பாட்டுத் திறன் : பயிர்கள் ஊட்டச் சத்துகளைத் திறம்படப் பயன்படுத்த உதவுகிறது.

உள்ளீட்டுச் செலவைக் குறைத்தல் : உரப் பயன்பாட்டைச் சிக்கனமாக மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளின் செலவைக் குறைக்க உதவுகிறது.

பயிர் வளர்ச்சி : பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கிறது.

மண் வளப் பாதுகாப்பு : உரங்களைத் திறம்படப் பயன் படுத்துவதன் மூலம் நிலையான விவசாயத்திற்கு உதவுகிறது.

மகசூல் மற்றும் தரம் : சிறந்த மகசூல் மற்றும் தரமான விளை பொருட்களைப் பெற உதவுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மூலக்கூறு மாதிரியாக்கம், பொருந்துதல் மற்றும் உருவகப்படுத்துதல் குறித்த நடைமுறைப் பயிற்சி

கோயம்புத்தூர், நவ.11

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU), கோயம் புத்தூரில் உள்ள தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவ லியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்





நுட்ப மையம் (CPMB&B) சார்பில் மூலக்கூறு மாதிரியாக்கம், பொருந்துதல் மற்றும் உருவகப்படுத்துதல் குறித்த மூன்று நாள் நடைமுறை பயிற்சி வகுப்பு நவம்பர் 10 முதல் 12 ஆம்தேதி 2026 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் புவனேஸ்வரில் உள்ள வேளாண் அறிவியல் நிறுவனம், பாகல்கோட்டில் உள்ள தோட்டக்கலை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை எஸ்.ஆர்.எம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகம், சென்னை ஹிந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் ஆகிய பல்வேறு கல்வி நிறுவனங் களைச் சேர்ந்த பேராசிரியர்கள், முதுநிலை மற்றும் முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் எல்.அருள் வரவேற்புரையாற்றி, இத்தகைய பயிற்சிப் பட்டறைகள் ஆராய்ச்சித் திறன்களை மேம்படுத்துவதிலும், அறிவியல் அறிவை வளர்ப்பதிலும் முக்கியப் பங்கு வகிப்பதை எடுத்துரைத்தார். தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் இயக்குநர் முனைவர் ந.செந்தில், பயிற்சித் திட்டத்தின் நோக்கங்கள் குறித்து விளக்கினார். மேலும், தற்போதைய ஆராய்ச்சிகளில் மூலக்கூறு மாதிரியாக்கம் மற்றும் மூலக்கூறு பொருந்துதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence – AI) பல்வேறு பயன்பாடுகள் மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் அதன் வளர்ந்து வரும் பங்களிப்பு குறித்தும் விரிவாக விளக்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.வெங்கடேசன் சிறப்புரையாற்றி னார். தோட்டக்கலைப் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் வேளாண் மையில் அவற்றின் பங்களிப்பு குறித்து எடுத்துரைத்தார். இறுதியாக, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தகவலியல் துறையின் இணைப் பேராசிரியர் முனைவர் நா.பாரதி நன்றியுரை வழங்கினார். இதனுடன் தொடக்க விழா இனிதே நிறைவுற்றது.

விழுப்புரம் மாவட்டத்தில் நெல் பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகளும் அவற்றின் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளும்



அறிமுகம் : நெல் தமிழ்நாட்டின் முக்கிய உணவுப் பயிர்களில் ஒன்றாகும். விழுப்புரம் மாவட்டத்தில் விவசாயிகள் அதிகளவில் நெல் சாகுபடி செய்கின்றனர். நெல் பயிரில் பூச்சித் தாக்குதல் ஏற்படுவதால் விளைச்சல் இழப்பு ஏற்படலாம். எனவே, பூச்சிகளை ஆரம்ப நிலையி லேயே கண்டறிந்து சரியான மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவது அவசியமாகும்.

நெல் பயிரைத் தாக்கும் முக்கிய பூச்சிகள்

1. நெல் தண்டு துளைப்பான் (Yellow Stem Borer)

புழுக்கள் தண்டின் உட்பகுதியைத் துளைத்து உண்கின்றன. இளம் பயிரில் குருத்து காய்ந்து காணப்படும்; கதிர் பருவத்தில் வெண்கதிர் அறிகுறி தோன்றும்.

2. நெல் இலை சுருட்டுப்புழு (Leaf Folder)

புழுக்கள் இலைகளைச் சுருட்டி உள்ளே இருந்து பச்சையத்தைச் சுரண்டி உண்கின்றன. இலைகளில் வெள்ளைக் கோடுகள் தோன்றி ஒளிச்சேர்க்கை பாதிக்கப்படும்.

3. நெல் பழுப்பு தத்துப்பூச்சி (Brown Planthopper)

பயிரின் அடிப்பகுதியில் கூட்டமாக இருந்து சாற்றை உறிஞ்சும். அதிக தாக்குதலில் பயிர்கள் வட்ட வடிவத் திட்டுகளாகக் காய்ந்து காணப்படும்; இது ஹாப்பர்பர்ன் எனப்படும்.

4. நெல் இலைப்பேன் (Rice Thrips)

இலைகளின் சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் சுருண்டு, நுனிப்பகுதி காய்ந்து காணப்படும். பயிரின் ஆரம்ப வளர்ச்சி பாதிக்கப்படும்.

ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் (IPM)

ரசாயன முறைகளை மட்டுமே நம்பாமல், பண்பாட்டு, இயற்கை,

உயிரியல், இயந்திர மற்றும் தேவையான நேரத்தில் ரசாயன முறைகளையும் ஒருங்கிணைத்துப் பயன்படுத்த வேண்டும்.

1. பண்பாட்டு மேலாண்மை

வயலைச் சுத்தமாகப் பராமரித்தல், பரிந்துரைக்கப்பட்ட காலத்தில் நடவு செய்தல், தேவையற்ற அதிகப்படியான தழைச்சத்து உரமிடுவதைத் தவிர்த்தல், நீர் மேலாண்மையை முறையாகக் கடைப்பிடித்தல், பாதிக்கப்பட்ட பகுதிகளைத் தொடர்ந்து கண்காணித்தல்.

2. இயற்கை மற்றும் உயிரியல் மேலாண்மை

சிலந்தி, தட்டான், பொறிவண்டு போன்ற நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாத்தல். டிரைக்கோகிரம்மா போன்ற முட்டை ஒட்டுண்ணிகளைப் பயன்படுத்துதல். வேப்பங்கொட்டைச் சாறு போன்ற தாவர அடிப்படையிலான பூச்சி விரட்டிகளைப் பரிந்துரைக்கப்பட்ட முறையில் பயன்படுத்துதல்.

3. இயந்திர மேலாண்மை

தண்டு துளைப்பானைக் கண்காணிக்க இனக்கவர்ச்சிப் பொறிகளைப் பயன்படுத்துதல். தேவையான இடங்களில் ஒளிப்பொறிகளை அமைத்தல். தாக்கப்பட்ட இலைகள் மற்றும் குருத்துப் பகுதிகளை அகற்றுதல்.

4. ரசாயன மேலாண்மை

பொருளாதாரச் சேதநிலையை (ETL) அடைந்த பிறகு மட்டுமே பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்துதல். வேளாண்மைத் துறை பரிந்துரைக்கும் மருந்துகளைச் சரியான அளவில் பயன்படுத்துதல், ஒரே வகை மருந்தைத் தொடர்ந்து பயன்படுத்துவதைத் தவிர்த்தல், பாதுகாப்பு உபகரணங்களை அணிந்து மருந்து தெளித்தல்.

விவசாயிகளுக்கான ஆலோசனைகள்

வாரந்தோறும் வயலைக் கண்காணித்து, பூச்சிகளின் ஆரம்ப அறிகுறிகளை அடையாளம் காண வேண்டும். நன்மை செய்யும் பூச்சிகளைப் பாதுகாத்து, தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும்.

முடிவுரை

சரியான நேரத்தில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் நெல் பயிரில் பூச்சி பாதிப்பைக் குறைத்து, நிலையான விளைச்சலைப் பெறலாம். இதனால் விவசாயிகளின் வருமானத்தையும் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் மேம்படுத்த முடியும்.

தகவல் : ***சுவாதி, NMV பல்கலைக்கழகம்.***

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

வளமிகு வேளாண்மை உதவி திட்டத்தில் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு தட்கல் மின் இணைப்பு பெறுவது எப்படி?



தமிழக சமூக நிதித்துறையின் சார்பில் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக ஆதி திராவிட விவசாயிகளுக்கு நீர்ப் பாசன வசதி எற்படுத்தி, வேளாண் உற்பத்தி மற்றும் வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில், 'வளமிகு வேளாண்மை உதவித் திட்டம்' 2026-27ஆம் நிதியாண்டில் செயல்படுத்தபடவுள்ளது.

இந்த திட்டத்தின் சிறப்பு தன்மை என்ன? தெரியுமா?

இத்திட்டத்தின் மூலமாக ஆதிதிராவிட விவசாயிகள் தங்களுடைய நிலங்களில் பாசன வசதிகளை மேம்படுத்தி, வேளாண் உற்பத்தியை பெருக்கவும், வழிவகை செய்யப் பட்டுள்ளது. விவசாய உற்பத்திக்கு தேவையான மின் மோட்டார் குதிரை திறன் (H.P) கேற்ப மின்சார இணைப்பு பெறுவதற்கான செலவில் 90% தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்திடம் (TANGEDCO) தாட்கோ அமைப்பு (TAHDCO) மானியமாக வழங்கும்.

1) 5 HP மின்மோட்டாருக்கான மின் இணைப்புக் கட்டணம் 2.50 லட்சம் எனில் பயனாளி (விவசாயி) 25,000 மட்டுமே பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். மீதமுள்ள 2.25 லட்சத்தை தாட்கோ மூலமாக மானியமாக வழங்கப்படும்.

2) 7.5 HP மின்மோட்டாருக்கான இணைப்புக் கட்டணம் 2.75 லட்சம் எனில் பயனாளி 27,500 செலுத்த வேண்டும். மீதமுள்ள 2.5 லட்சம் தாட்கோ மானியமாக வழங்கும்.

3) 10 HP மின்மோட்டாருக்கான மின் இணைப்புக் கட்டணம் 3 லட்சம் எனில் பயனாளிகள் 30,000 மட்டுமே செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 2.70 லட்சத்தை தாட்கோ மானியமாக வழங்கப்படும்.

இத்தொகைகள் தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகத்தில் செலுத்தப்பட்டு விரைவு மின் இணைப்பு வழங்க பரிந்துரைக்கப்படும்.

இத்திட்டத்தில் இணைய விரும்பும் விவசாயிகள் (பயனாளிகள்) தகுதி என்ன?

1) இத்திட்டத்தில் இணைய விரும்பும் விவசாயிகள் ஆதி திராவிட இனத்தை சேர்ந்தவராகவும் (SCHEDULED CASTE) ஆண்டு வருமானமாக 3 லட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2) விவசாய நிலம் விண்ணப்பதாரின் பெயரில் சொந்தமாக இருப்பதுடன் அதற்கான பட்டாவும் இருக்க வேண்டும்.

3) அந்த நிலத்தில் கிணறு / ஆழ்துளைக்கிணறு அமைக்கப் பட்டு, மின் இணைப்பு கோரி விண்ணப்பித்து இருக்க வேண்டும்.

4) விண்ணப்பதாரர் ஏற்கனவே தாட்கோ திட்டங்களில் எந்தவித சலுகையும் பெற்று இருக்க கூடாது.

எந்த முகவரியில் விண்ணப்பிப்பது?

http://tahdco.com. என்ற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

வளமிகு வேளாண்மை உதவி திட்டத்தின் நிதி ஒதுக்கீடு எவ்வளவு தெரியுமா?

இத்திட்டத்தின் கீழ் 1000 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு தட்கல் முறையில் மின் இணைப்பு வழங்க தமிழக அரசு 26.09 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



மகளிர் விவசாயிகளுக்கான வேளாண் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி!

சிவகங்கை, நவ.11

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் வட்டாரத்தில், மகளிர் விவசாயிகளுக்கான மத்திய அரசின் வேளாண் நலத்திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விழிப் புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.



இந்நிகழ்ச்சியில், மகிளா கிசான் சக்திகரண் பரியோஜனா (MKSP) திட்டம் குறித்து விளக்கப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மகளிர் விவசாயிகளின் திறன்களை மேம்படுத்துதல், இயற்கை மற்றும் நிலையான வேளாண் முறைகளை ஊக்குவித்தல், விவசாயத்தில் பெண்களின் பங்களிப்பை அதிகரித்தல் ஆகியவை–யாகும்.

மேலும், நமோ ட்ரோன் தீதி (Namo Drone Didi) திட்டம் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ட்ரோன் தொழில்நுட்பப் பயிற்சி அளித்து, விவசாயத்தில் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தல் போன்ற பணிகளில் ட்ரோன்களைப் பயன்படுத்து வதற்கான வாய்ப்புகள் குறித்து விளக்கப்பட்டது.

தொடர்ந்து, வேளாண் விரிவாக்கத் திட்டங்கள் மூலம் மகளிர் விவசாயிகளுக்கு வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள், செயல்விளக்கங்கள் மற்றும் சுயதொழில் வாய்ப்புகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியானது வேளாண்மை விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் பு.அரவிந்த் வழிகாட்டுதலின்படி, மாணவி களான பா.மகேஸ்வரி, சு.சந்தியா, செ.யாழினி, க.விவேகா, கு.கீர்த்தனா, செ.ஸிவஸ்ரீ மற்றும் செ.ராஜேஸ்வரி ஆகியோரால் சிறப்பாக நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம் மகளிர் விவசாயிகள் அரசின் வேளாண் நலத்திட்டங்களை அறிந்து, அவற்றைப் பயன்படுத்தி தங்களது வாழ்வாதாரத்தையும் பொருளாதார நிலையையும் மேம்படுத்திக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற தரமான விதை அவசியம்!

கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலை பெற, அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் இரகங்களை தேர்வு செய்து அந்த ரகங்களின் தரமான விதைகளையே பயன்படுத்த வேண்டும் என்று மூத்த வேளாண்மை அலுவலர் க.விஜயா தெரிவித்துள்ளார்.

கார்த்திகை பட்டம் என்பது கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில்





நவம்பர் – டிசம்பர்) விதைப்பு செய்யப்படுவ தாகும். கார்த்திகை மாதத்திற்குள் நிலக் கடலையை விதைப்பு செய்வது அதிக மகசூலுக்கு வாய்ப்பை அளிக்கிறது. இந்த பட்டத்தில் சாகுபடி செய்யும்போது, போதிய மழை, சரியான தட்பவெப்ப நிலை சாதகமாக இருப்பதால் அதிக மகசூல் பெறப்படுகிறது.

கடலூர் மாவட்டத்தில் கார்த்திகை மற்றும் மார்கழி பட்டத்தில் அதிக அளவில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. VRI - 9, VRI - 10, Girnar 4, Girnar 5 போன்ற இரகங்கள் பயிரிடப்படுகிறது.

நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூலைப் பெற, அந்த ரகங்களின் தரமான விதைகளை பயன்படுத்துவது முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகும். முளைக்கட்டி விதைத்தல் முறையை கடைபிடித்து முளைக் கட்டிய விதைகள் மற்றும் இறந்த விதைகளை தனியே பிரித்து எடுத்து விட வேண்டும். இவ்வாறு நல்ல தரமான விதைகளை தேர்வு செய்து விதைப்புக்கு பயன்படுத்த வேண்டும். பயிரிடும் விதை தரமானதாக இருப்பது அவசியம் என்பதால் விதையின் தரத்தை பரிசோதிக்க அந்தந்த மாவட்டங் களில் உள்ள அரசு விதை பரிசோதனை நிலையங்களில் விதை களை கொடுத்து அதன் தரத்தை அறிந்து கொள்ளலாம். விதையின் தர நிர்ணய காரணிகளான முளைப்புத்திறன், புறத் தூய்மை மற்றும் ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன.

தரமான நிலக்கடலை விதை என்பது குறைந்தபட்சம் 70 சதவீதம் முளைப்புத்திறனும், அதிக பட்சமாக 9 சதவீதம் ஈரப்பதமும் குறைந்தபட்சமாக 96 சதவீதம் புறத்தூய்மையும் இருத்தல் அவசியம். கடலூர் மாவட்டத்தில் எண்.97, பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலைசெட்டி சாவடி, கடலூர் – 607 006 என்ற முகவரியில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விதைப் பரிசோதனை நிலையத்தில் 500 கிராம் அளவிற்கு நிலக்கடலை விதை மாதிரி எடுத்து பயிர், இரகம், நிலை மற்றும் குவியல் எண் ஆகியவை குறித்த விவரத்துடன் கொடுத்து அறிந்து கொள்ளலாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- வசூலிக்கப்படும்.

நிலக்கடலை சாகுபடியில் அதிக இடுபொருள் செலவாக இருப்பது விதை தான். எனவே நல்ல தரமான விதையை தேர்வு செய்வது மிகவும் அவசியமாகும். இவ்வாறு செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இயற்கை வேளாண்மை விழிப்புணர்வு முதல் தீபாவளிக் கொண்டாட்டம் வரை விவசாயிகளுடன் இணைந்து களப்பணியில் ஈடுபட்ட வேளாண் மாணவிகள்



திருச்சி, நவ.11

திருச்சி, அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகளான ரித்திகா, சஹானா ஷாஜிதா, சாலினி, சந்தியா, சஹானா, ஷாலினி, சௌமியா, ஸ்ரீதுர்கா, ஸ்ரீபிரியா, சுபிதா மற்றும் சிந்துஜா ஆகிய 11 பேர், ஊரக வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் (RAWE) கீழ், கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டாரத்தில் உள்ள முருகன்குடி கிராமத்தில் செயல்பட்டு வரும் செந்தமிழ் மரபுவழி வேளாண் நடுவத்தின் ஒருங்கிணைப்பாளர் முருகன், இயற்கை விவசாயியின் வயலுக்குச் சென்று இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு மற்றும் பல்வேறு களப்பணிகளை மேற்கொண்டு, நடைமுறை அனுபவங்களையும் கற்றறிந்தனர்.

இந்நிகழ்வின் முக்கிய நோக்கம் இயற்கை வேளாண்மை முறைகள், மண் வளப் பாதுகாப்பு, பாரம்பரிய நெல் ரகங்களின் முக்கியத்துவம் பற்றி அறிந்து கொள்வதாகும். இதன் ஒரு பகுதியாக, விவசாயியின் நேரடி கள அனுபவங்களைக் கேட்டறிந்ததுடன், கல்லூரியில் கற்ற அறிவியல் அறிவை நடைமுறை வேளாண்மை யுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்பையும் மாணவிகள் பெற்றனர்.

இந்நிகழ்வில் இயற்கை விவசாயி முருகன், இரசாயன உரங் களின் தொடர்ச்சியான பயன்பாட்டினால் மண்ணில் உப்புத்தன்மை அதிகரித்தல், மண்ணின் இயல்பான தன்மை மாறுதல் மற்றும் நன்மை செய்யும் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை குறைதல் போன்ற பாதிப்புகள் குறித்து தனது கள அனுபவங்களை மாணவி களுடன் பகிர்ந்து கொண்டார். மேலும், மண்ணின் கரிமச்சத்தைப் பாதுகாத்தல் மற்றும் இயற்கை வளங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் அவசியத்தையும் எடுத்துரைத்தார்.

இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்கள் குறித்த கலந்துரை யாடல் பசுந்தாள் உரமிடுதல், உயிர் மூடாக்குப் பயிர்கள் வளர்த்தல், பயனுள்ள நுண்ணுயிரிகளின் (Effective Microorganisms – EM) பயன்பாடு, வெஞ்சுரி பாசன முறை (Venturi Irrigation System), பாய்

நாற்றங்கால் மற்றும் ஒற்றை நாற்று நடவு முறை போன்ற தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயியும் மாணவிகளும் கலந்துரையாடினர்.

இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு குறித்த விளக்கம்

அமிர்தக் கரைசல், பஞ்சகவ்யம், தேமோர் கரைசல் மற்றும் மீன் அமிலம் போன்ற இயற்கை இடுபொருட்களைத் தயாரிக்கும் முறைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கப் பட்டது. மேலும், வேம்பு, நொச்சி, எருக்கு, பப்பாளி உள்ளிட்ட தாவரப் பொருட்களைக் கொண்டு இயற்கை பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறையையும் மாணவிகள் அறிந்து கொண்டனர்.

பாரம்பரிய நெல் ரகங்கள் குறித்த விழிப்புணர்வு

தொடர்ந்து, சீரக சம்பா, கருப்புக் கவுனி, காட்டுயானம், மாப் பிள்ளை சம்பா, கருடன் சம்பா, அறுபதாம் குறுவை, திருக்குறுவை, பூங்கார், கருங்குறுவை மற்றும் தூயமல்லி உள்ளிட்ட பாரம்பரிய நெல் ரகங்களின் சிறப்புகள், சாகுபடிக் காலம் மற்றும் பயன்பாடுகள் குறித்து விவசாயி விளக்கமளித்தார். பாரம்பரிய நெல் ரகங்களைப் பாதுகாத்தல், விதை நெல் உற்பத்தி மற்றும் அவல் போன்ற மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பதன் முக்கியத்துவமும் எடுத்துரைக்கப்பட்டது.

விவசாயிகளுடன் தீபாவளிக் கொண்டாட்டம் மற்றும் மரக்கன்று நடுதல்

மேலும், கிராமப்புற விவசாயிகளுடன் மாணவிகள் இணைந்து தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினர். விவசாயிகளுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் நோக்கில் மாணவிகள் இணைந்து பன்னீர் மரக்கன்றை நட்டனர். மரக்கன்றுகளை வளர்ப்பதன் அவசியம் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வின் மூலம் மாணவிகள் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பங்கள், மண் வள மேலாண்மை, பாரம்பரிய நெல் ரகங்களின் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான நடைமுறை அறிவைப் பெற்றனர்.

மேலும், விவசாயிகளுடன் இணைந்து பண்டிகையைக் கொண்டாடியதன் மூலம் சமூகப் பொறுப்புணர்வையும் வளர்த்துக் கொண்டனர். இந்நிகழ்வுகள் ஊரக வேளாண் அனுபவப் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்றன.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர்,
  ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
  பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள்
  கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

வறட்சியைத் தாங்கும் PPFM தெளிப்பு

சிவகங்கை, நவ.11

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயம் பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்து நடைபெற்று வருகிறது. மழைப்பொழிவு குறைவு, அதிக வெப்பநிலை மற்றும் பாசன நீர் பற்றாக்குறை போன்ற காரணங்களால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன், மகசூல் இழப்பும் ஏற்பட வாய்ப்புள்ளது. த்தகைய சூழ்நிலைகளில் பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்து, வறட்சியால் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க உதவும் PPFM (Pink Pigmented Facultative Methylotrophs) எனப்படும் நன்மை தரும் நுண்ணுயிர் தொழில் நுட்பத்தை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

PPFM என்றால் என்ன?

PPFM என்பது Methylobacterium எனப்படும் நுண்ணுயிரிகளைக் கொண்ட திரவ உயிரியல் உள்ளீடாகும். இவை பயிர்களின் இலைப் பரப்பில் இயற்கையாகவே காணப்படும் நன்மை தரும் பாக்டீரி யாக்கள் ஆகும். இவை தாவர வளர்ச்சிக்கு உதவும் சைட்டோ கைனின் மற்றும் ஆக்சின் போன்ற வளர்ச்சி ஊக்கப் பொருட்களின் உற்பத்தியில் பங்களிக்கின்றன.

PPFM தெளிப்பதால் ஏற்படும் நன்மைகள்

PPFM தெளிப்பதன் மூலம் பயிர்களின் வளர்ச்சி ஊக்குவிக்கப் படுவதுடன், இலைகளில் பச்சையம் மற்றும் ஒளிச்சேர்க்கை செயல் பாட்டை மேம்படுத்த உதவுகிறது. மேலும், வறட்சி மற்றும் அதிக வெப்பநிலையால் ஏற்படும் ஈரப்பதப் பற்றாக்குறை அழுத்தத்தை ஓரளவு குறைக்க உதவுகிறது. பயிர்களின் சீரான வளர்ச்சி, பூக்கள் மற்றும் காய்கள் உருவாதல், விளைபொருளின் தரம் மற்றும் மகசூல் மேம்பாட்டிற்கும் துணை புரிகிறது.

எந்தப் பயிர்களில் பயன்படுத்தலாம்?

நெல், உளுந்து, பாசிப்பயறு, நிலக்கடலை, எள், பருத்தி, கரும்பு மற்றும் காய்கறிப் பயிர்கள் உள்ளிட்ட பல்வேறு பயிர்களில் PPFM பயன்படுத்தலாம். குறிப்பாக மானாவாரி விவசாயம் நடைபெறும் பகுதிகளில் பயிர்கள் ஈரப்பதப் பற்றாக்குறையைச் சந்திக்கும் சூழ்நிலைகளில் இது ஒரு பயனுள்ள துணைத் தொழில்நுட்பமாக அமையும்.

தெளிக்கும் முறை

பொதுவான 1 சதவீத PPFM தெளிப்புக் கரைசல் தயாரிக்க ஒரு

லிட்டர் தண்ணீருக்கு 10 மில்லி PPFM திரவத்தைச் சேர்த்து நன்கு கலக்க வேண்டும். பயிரின் இலைகள் முழுவதும் நன்கு நனையும்படி காலை அல்லது மாலை நேரங்களில் தெளிக்க வேண்டும். நெற்பயிரில் நடவு செய்த 10 நாட்களுக்குப் பிறகு, தூர்கள் கட்டும் பருவம், கதிர் உருவாகும் பருவம் மற்றும் பூக்கும் பருவம் போன்ற முக்கிய வளர்ச்சி நிலைகளில் பயன்படுத்தலாம்.

விவசாயிகள் கவனத்திற்கு

PPFM-ஐ பூச்சிக்கொல்லிகள், பூஞ்சைக்கொல்லிகள் மற்றும் ரசாயன உரங்களுடன் ஒரே தெளிப்புக் கலவையில் கலந்து பயன் படுத்தக்கூடாது. தனியாகத் தெளிக்க வேண்டும். தரமான திரவ உயிரியல் உள்ளீட்டைப் பயன்படுத்துவதுடன், அதன் தயாரிப்பு நிறுவனத்தின் பரிந்துரைக்கப்பட்ட அளவையும் பின்பற்ற வேண்டும். PPFM என்பது பாசனத்திற்கு மாற்று அல்ல; வறட்சி மேலாண்மைக்கு உதவும் ஒரு துணைத் தொழில்நுட்பம் மட்டுமே. எனவே, சிவகங்கை மாவட்ட விவசாயிகள் PPFM தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பயிர்களின் வளர்ச்சியை மேம்படுத்தி, பருவநிலை மாற்றம் மற்றும் ஈரப்பதப் பற்றாக்குறையால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்துப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

இத்தகவலை சி.சிவகாமி, விதைப்பரிசோதனை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், மதுரை மற்றும் ச.பாலகணபதி, வேளாண்மை அலுவலர், விதைப்பரிசோதனை நிலையம், சிவகங்கை தெரிவித்துள்ளனர்.

டிரைக்கோடெர்மா விரிடி மூலம் நெல் விதை நேர்த்தி செயல்விளக்கம்!

நாமக்கல், நவ.11



பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியின் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், நாமக்கல் மாவட்டம் மோகனூர் வட்டாரத்தில் உள்ள தீர்த்தாம்பாளையம் கிராமத்தில் விவசாயிகளுக்கு டிரைக்கோ டெர்மா விரிடி (Trichoderma viride) பயன்படுத்தி நெல் விதை நேர்த்தி செய்யும் முறை குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாணவிகள் ரா.பார்வதவர்த்தினி, மு.ராஜலட்சுமி, ஐ.பிரியதர்ஷினி, ச.பிரியதர்சினி, மு.பிரியங்கா, எஸ்.பச்சை யம்மாள், ச.பத்மநேத்ரா மற்றும் ச.பொன்மணி ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கினர். மேலும், ஒரு கிலோ நெல் விதைக்கு 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்யும் முறையைச் செயல்விளக்கமாக எடுத்துரைத்தனர். இம்முறையானது விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்தவும், ஆரோக்கியமான நாற்று வளர்ச்சியை ஊக்குவிக்கவும் உதவுகிறது. ரசாயனப் பூஞ்சைக் கொல்லிகளுக்கு மாற்றாக உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தையும் விவசாயிகளுக்கு எடுத்துரைத் தனர். இச்செயல்விளக்கம் விவசாயிகளிடையே சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் குறைந்த செலவிலான வேளாண் தொழில்நுட்பங் களைப் பின்பற்றுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

கோபாலபுரம் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு!

திருவண்ணாமலை, நவ.11

ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE – Rural Agricultural Work Experience) ஒரு பகுதியாக, திருவண்ணாமலை மாவட்டம், வாழவச்சனூரில் உள்ள வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் (AC & RI) சேர்ந்த மாணவர்கள், கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டம், கம்மாபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கோபாலபுரம் கிராமத்தில் பங்கேற்பு ஊரக மதிப்பீடு (Participatory Rural Appraisal – PRA) நிகழ்ச்சியை மேற்கொண்டனர்.

இதில் கிராம மக்களின் ஒத்துழைப்புடன் சமூக வரைபடம், காலவரிசைப் பட்டியல், ஆண் மற்றும் பெண் மக்கள் தொகை விவரம், பருவகால நாட்காட்டி, இடப்பெயர்வு வரைபடம் மற்றும் அன்றாட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், நெல் மற்றும் முந்திரி பயிர்களில் காணப்படும் பூச்சி மற்றும் நோய்த் தாக்குதல்கள், அவற்றிற்கான காரணங்கள் மற்றும் தீர்வுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. கிராமத்தின் பொருளாதார நிலையை அறிய செல்வ நிலை வகைப்படுத்தல், பயிர்



பிரமிடு, வருமானம் மற்றும் செலவின வரைபடம், வளங்கள் வரைபடம் மற்றும் பிரச்சினை மரம் ஆகியவை உருவாக்கப்பட்டன.

இந்நிகழ்வின் மூலம் கிராமத்தின் சமூக, பொருளாதார மற்றும் வேளாண் நிலைகள் குறித்து மக்களின் நேரடிப் பங்கேற்புடன் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் கிராமத்தைச் சேர்ந்த ஏராளமான விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று, வேளாண் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் புதிய தொழில்நுட்பத் தகவல்களை அறிந்து பயனடைந்தனர்.



பள்ளி மாணவர்களுக்கான அங்கக சாகுபடியாளர் திறன் மேம்பாட்டு பயிற்சி



திருச்சி, நவ.11 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் தொழிற்கல்வி பள்ளிமாணவர்களுக்கான அங்கக சாகுபடியாளர் திறன் மேம்பாட்டு பயிற்சியானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்துடன் இணைந்து 20 நாட்கள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் முசிறி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மண்ணச்சநல்லூர் அரசு மாதிரி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அய்யம்பாளையம் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 58 மாணவர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தொடங்கி வைத்து அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் குறிக்கோள்கள் குறித்து எடுத்துரைத்தார்.

அங்கக வேளாண்மை முறையில் பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள், அங்கக வேளாண் இடுபொருட்கள் தயாரிப்பு மற்றும் மண்வளம் பாதுகாப்பு குறித்து முனைவர் செ.ராதிகா தெளிவாக எடுத்துரைத்தார். உயிர் உரங்கள், பசுந்தாள் உரப்பயிர்கள் மற்றும் பயன்கள், அங்கக சான்றளிப்பு மற்றும் அங்கக சாகுபடிக்கு அரசால் வழங்கப்படும் திட்டங்கள் குறித்து முனைவர் மு.சகிலா விளக்கினார். அங்கக வேளாண் பொருட்கள் மதிப்பு கூட்டுதல் பற்றி முனைவர் மாரிமுத்து விளக்கினார். அங்கக வேளாண்மையில் காய்கறிகள் சாகுபடி பற்றி முனைவர் தனலட்சுமி எடுத்துரைத்தார். அங்கக வேளாண்மையில் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி முனைவர் கண்ணன் கூறினார்.

இப்பயிற்சியில் மண்புழு உரம் தயாரிப்பு, அசோலா வளர்ப்பு, அங்கக வேளாண்மையில் காய்கறிகள் சாகுபடி மற்றும் மண்ணில்லா தீவனப் பயிர் சாகுபடி போன்ற தொழில்நுட்பங்களை செயல்விளக்கங்கள் மூலம் கற்றுக் கொண்டனர்.

மேலும், முனைவர் ராதிகா பஞ்சகாவியம், அமிர்தகரைசல், ஜீவாமிர்தம், மீன் அமிலம், முட்டை அமிலம், வேப்பிலை கரைசல், 3 ஜிகரைசல், ஐந்திலை கரைசல் போன்ற அங்கக வேளாண் இடுப் பொருட்களின் தயாரிப்பு பற்றிய தொழில்நுட்பங்களை எடுத்துக்கூறி செயல் விளக்கம் அளித்தார். மாணவர்களுக்கு களப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. பயிற்சியின் இறுதியில் பங்கு பெற்ற பள்ளி மாணவர்களுக்கு சான்றிதழ்கள், பாராட்டு பதக்கங்கள் மற்றும் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டது. இந்த திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான ஏற்பாடுகளை உழவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் செ.ராதிகா மற்றும் குழுவினர்கள் செய்திருந்தனர்.

ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரி மாணவர்களுக்கு விதை பரிசோதனை நிலையத்தில் தொழிற்நுட்ப பயிற்சி

வேலூர், நவ.11

வேலூர் மாவட்டம், டோல்கேட்டில் நெ.96/3, ஒழுங்குமுறை விற்பனை குழு கட்டிட வளாகம், IIஆம் தளத்தில் அமைந்துள்ள விதை பரிசோதனை நிலையத்திற்கு ஆதிபராசக்தி தோட்டக்கலை கல்லூரி, இராணிப்பேட்டையில் பயிலும் இறுதி ஆண்டு இளங்கலை மாணவர்களுக்கு விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப் படும் பணிகளை குறித்த நடைமுறை பயிற்சி மற்றும் விதை பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றி விளக்கங்கள் அளிக்கப் பட்டது. இதில் 50 மேற்பட்ட மாணவர்கள் பங்கு கொண்டார்கள்.

இப்பயிற்சியின் போது இவ்வாய்வகத்தில் பெறப்படும் மூன்று வகையான விதை மாதிரிகளான சான்று விதை மாதிரி, ஆய்வாளர் விதை மாதிரி, பணி விதை மாதிரி பற்றியும், இவைகள் யாரிட மிருந்து பெறப்படுகிறது என்பது பற்றியும், விதை மாதிரிகள் பதிவு செய்தல், தொழிற்நுட்ப பதிவேடுகள் பராமரித்தல், புறத்தூய்மை பரிசோதனை, பிற இரக கலவன் கண்டறிதல், ஈரப்பத பரிசோதனை, முளைப்புத்திறன் கணக்கீட்டில் இயல்பான நாற்று, இயல்பற்ற நாற்று, கடினவிதை, உயிரற்ற விதை பற்றியும் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. எந்ததெந்த விதைமாதிரிகளுக்கு எந்த மாதிரியான விதைப்பு ஊடகம் (Sowing Media) பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும், ஆய்வகத்தில் பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. முளைப்புதிறன் அறை யில் விதைகளின் முளைப்புதிறனை சரியாக கண்டறிய எவ்வளவு வெப்பநிலை, ஒளி இருக்க வேண்டும் என்பது பற்றியும், அதை கட்டுபாட்டுக்குள் கொண்டு வர பயன்படுத்தப்படும் கருவிகள் பற்றியும் விளக்கமாக கூறப்பட்டது. ஆய்வகத்தில் விதை மாதிரிகள் எவ்வாறு பாதுகாத்து வைக்கப்படுகிறது என்பதையும், அவ்வாறு

பாதுகாக்கப்பட்ட விதை மாதிரிகள் எந்த காலகட்டத்தில் அழிக்கப்பட வேண்டும் என்பதை பற்றியும் விளக்கி கூறப்பட்டது. மேலும் விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஸ்பெக்ஸ் (SPECS) மற்றும் சாதி (SATHI) இணையதளத்தில் பதிவேற்றம் செய்வது பற்றியும் விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில் தரமான விதைகள் உற்பத்தி செய்ய விதை பரிசோதனையின் முக்கியத்துவம் மற்றும் அதிக விளைச்சலுக்கு விதை பரிசோதனை எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு பயனளிக் கிறது என்பது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் விதையின் தரத்தினை அறிந்து கொள்ள ஒரு பணி விதை மாதிரிக்கு பரிசோதனை கட்டணமாக ரூ.80/- பெறப்படுகிறது என்கிற விவரம் மாணவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. மேற்படி பயிற்சியினை வேலூர், விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் க.லதா மற்றும் மு.சண்முகப்பிரியா மாணவர்களுக்கு வழங்கினர்.

பரமத்தி கிராம விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்த பக்கெட் ட்ராப் செயல்விளக்கம்!



பெரம்பலூர், நவ.11

சேலம் மாவட்டம், பரமத்தி கிராமத்தில் விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, தென்னை மரங்களைத் தாக்கும் காண்டாமிருக வண்டுகளைக் கட்டுப்படுத்துவது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் சார்பில் ராவே (ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டம்) திட்டத்தின் கீழ் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், தென்னை மரங்களில் காண்டாமிருக வண்டுக ளைக் கட்டுப்படுத்த உதவும் பக்கெட் ட்ராப் (Bucket Trap) தொழில் நுட்பம் குறித்து பரமத்தி கிராம விவசாயிகளுக்கு மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர். பக்கெட் ட்ராப் முறையின் பயன்பாடு, அதன் செயல்பாடு மற்றும் தென்னைப் பயிரில் பூச்சித் தாக்கு தலைக் கண்காணிக்கும் வழிமுறைகள் குறித்து விளக்கினர். மேலும், காண்டாமிருக வண்டின் தாக்குதல் அறிகுறிகளைக் கண்டறிதல், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளைப் பின்பற்றுதல் மற்றும் தென்னை மரங்களைப் பாதுகாப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ராவே திட்டத்தின் மூலம் மாணவிகள் கிராமப்புற விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு, வேளாண் தொழில்நுட்பங்களைச்

செயல்விளக்கத்தின் வாயிலாகப் பகிர்ந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி, பரமத்தி கிராம விவசாயிகளிடையே நவீன பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்தது. இந்நிகழ்வில் தனலட்சுமி சீனிவாசன் வேளாண்மைக் கல்லூரியை சேர்ந்த 8 மாணவிகள் பங்கேற்றனர்.

Rithvik Pipe

25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

ISI PVC PIPE -	ASTM UPVC PIPE -	ISI CONDUIT PIPE -	ISI PLUMBING PIPE -	ISI BOREWELL CASING PIPE -
20mm to 250mm (All Classes)	21mm to 114mm (SCH 40, SCH80)	16mm to 63mm (Light, Medium, Heavy)	25mm to 50mm (15KG)	125mm to 250mm

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741